உ

கடவுள் துணை.

ஆனந்த

# முத்துவீராயிபாட்டு.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

17-18 சானத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

உ

கடவுள் துணை.

## ஆனந்த

# முத்துவீராயி பாட்டு.

## காப்பு.

### விநாயகர் துதிவெண்பா.

பத்தியுடனெஞ்சகமே பாரகத்திலுள்ளார்க்குத்
தித்திக்கபாவெடுத்துச்செப்பும் - முத்து
வீராயிசிந்தை விளம்புதற்குக்காரானை
நேராக நிற்க நினை.

## நூல்.

ஆண்பிள்ளையாகப்பிறந்ததெல்லாஞ் சுகம்
அனுபவிக்கவென்றறியாயோடி
காண்பவரென்னைப்பழித்திகழாமற்
காலத்தணைவாய்முத்துவீராயி. (௧)

வீதியிலேவிளையாடையிலே ஒரு
ஓட்டைக்கரண்டகங்கண்டெடுத்தேன்
கண்ணைச்சிமிட்டியேவாங்கிக்கொண்டா ளவள்
கட்டழகிமுத்துவீராயி. (௨)

ஊரான்ஊரான்தோட்டத்திலே பிள்ளாய்
ஒருவன்போட்டதுவெள்ளரிக்காய்
காசிக்கிரண்டுவிற்கச்சொல்லி யவன்
காகிதம்போட்டாண்டிவெள்ளைக்காரன். (௩)

ஒருவருஷமாய்ஒண்ணரைமாதமாய்
எண்ணையுந்தேய்த்துமுழுகாமல்
சடைவளர்ந்ததுஞ்சன்னியாசியானதுஞ்
சம்மதமோமுத்துவீராயி. (௪)

முல்லையரும்படிநீயெனக்கு சின்ன
மூக்குத்திநத்தடிநானுனக்கு
முல்லையரும்புக்குமூக்குத்திநத்துக்கும்
மோசமுண்டோமுத்துவீராயி (௫)

நேரமாமென்றுவிசாரம்வேண்டாம் நிமிஷம்
நேரத்தில்வந்துன்னைக்கூட்டிக்கொண்டு
தூரமான துரைப்பட்டணம்போகத்தான்
துணையாய்வருவாய்முத்துவீராயி. (௬)

என்னடியக்கா துரைமகன்கோட்டை
பளிச்சுபளிச்சென்றுமின்னுதடி
என்றைக்குக்கோட்டைபிடிப்பாரோநான்
என்றைக்குமஞ்சள்குளிப்பேனோ. (௭)

தேங்காயுருளத்தினையுருள இந்த
தேங்காய்த்தண்ணீரலைமோத

மாங்காகாய்ச்சியுருளுதடி யிந்த
மகாராஜன்தொண்டமான்சீமையிலே. (அ)

குற்றாலம்போனகொண்டைக்காரி சற்றே
மத்தளம்வாங்கிநீவாராயோ
சித்தந்தெளியவேகும்பகோணத்திலே
சேதியறிந்திடப்பாடாயோ. (௯)

தென்னமரத்துப்பாளைக்குள்ளே ரண்டு
தேரையிருந்துமுழிக்குதுபார்
தென்னலடிக்குதுஎன்னைமயக்குது
தேன்மொழியேமுத்துவீராயி. (௧0)

பாக்குமரத்துப்பாளைக்குள்ளே ரண்டு
பட்சியிருந்துமுழிக்குதுபார்
பட்சிபறக்குதுபாக்குந்துவர்க்குது
பைங்கிளியேமுத்துவீராயீ. (௧௧)

தென்னமரத்திலேபாளைகட்டி நல்ல
தெய்வலோகததிலேகள்ளிறக்கி
கள்ளுகுடிக்கப்போனவிடந்தனில்
தன்னைமறந்ததைப்பாருங்கடி. (௧௨)

வயிர்பசிக்குதுகஞ்சியில்லை தெரு
வாசற்கிணற்றிலேதண்ணீரில்லை
அறுத்தவிரலில்ரத்தமில்லை யிந்த
அறிவுகெட்டதோழிக்குவெட்கமில்லை. (௧௩)

கூந்தல்பெருத்தது கும்பகோணம் பிள்ளாய்
கொண்டைபெருத்தது புதுக்கோட்டை
வாரிமுடித்தது அம்மாம்பேட்டை யவள்
அஞ்சிநடந்தது தஞ்சாவூர் (கச)

என்னடியக்கா தெற்கத்தியா யுனக்
கெந்நேரம்பார்த்தாலுந்தொள்ளைக்காது
தெற்குச்சீமையிலேதக்கைபோட்டு அவள்
தேடிவளர்த்தாளேவீராயி. (கரு)

குங்குமந்தன்னைச்சுமந்தமங்கைதன்
குணத்தைக்கண்டுகொள்ளவுந்தரமோ
எங்குஞ்சிம்ப்ச்சி[illegible]ம்மைக்குநற்பலன்
ஏற்காதடிமுத்துவீராயி. (கசா)

பெண்டுகள்பூத்தேடிவைக்கவேணும் வைத்தால்
பிறரறியாமலிருக்கவேணும்
கொண்டைமேற்பூத்தோணவைத்தால்வேசியென்று
கூறுவாரேமுத்துவீராயி. (கஎ)

தன்னடிபார்த்துநடப்பதே யாவர்க்கும்
சற்குணமென்றுசாற்றுவார்கள்
அன்னநடையொடுமுன்னும்பின்னும்பார்ப்ப
தழகல்லவேமுத்துவீராயி. (கஅ)

நன்மொழிச்சர்க்கரைக்கஞ்சிவார்த்துச் சில
நாட்போனபின்புவிட்டோட்டாமலே

அன்புடனல்லும்பகலுமுன்னைவைத்
தாதரிப்பேன்முத்துவீராயி. (௧௯)

நம்பினவனைக்கைவிடாதேயெப்போதும்
நான்சொன்னசொல்லைமறவாதே
நம்பவைத்துன்னைபின்நட்டாற்றில்வைப்போர்சொல்
நயக்காதேமுத்துவீராயி (௨0)

மதுரைப்பட்டணவீதியிலேமண
வாளனும்நீயுமாய்ப்போகையிலே
குறித்தகோபுரவாசலுநகரும்
கூந்தல்கண்டேன்முத்துவீராயி. (௨௧)

வாடாதபூவேமருக்கொழுந்தே யுந்தன்
வாசலிலேவரக்காணேனடி
தேடாதநாளிலேதேடித்தேடிநொந்தேன்
தேன்மொழியேமுத்துவீராயி. (௨௨)

நடப்புநாற்காலிபோட்டுக்கொண்டு உன்னால்
நானெண்ணேதேய்த்துமுழுகாமல்
சடைவளர்ந்ததுஞ்சந்நியாசியானதுஞ்
சம்மதமோமுத்துவீராயி. (௨௩)

இந்தநிலாவுநிலாவுமல்ல பிள்ளாய்
நித்திரைக்கேற்றநிலாவுமல்ல
இந்தநிலாவுக்குஞ்சந்தனப் பாட்டுக்கும்
ஏற்குமோசொல்முத்துவீராயி. (௨௪)

சாந்துபொட்டடிநீயெனக்கு நல்ல
சவ்வாதுபொட்டடிநானுனக்கு
சாந்துபொட்டுக்குஞ்சவ்வாதுபொட்டுக்கும்
சம்மதமோ முத்துவீராயி. (உடு)

வல்லத்துக்கச்சேரிவடக்காலே பிள்ளாய்
வங்காளக்கச்சேரிதெற்காலே
ஏழைக்கிரங்கியமங்காரிதுரை
எப்போவருவார் முத்துவீராயி. (உசு)

இராணிமகன்வரக்கேள்விப்பட்டுத் தஞ்சை
யிராஜன்வருவாரென்றெண்ணப்பட்டு
திராணியுள்ளதேசக்கூட்டமெல்லாமிப்போ
திரண்டுவாருர் முத்துவீராயி. (உஎ)

வெள்ளைக்காரன்பணஞ்சின்னபண மது
வேடிக்கைபார்க்குமாம்வெள்ளிப்பணம்
வெள்ளிப்பணத்துக்குஆசைப்பட்டு அடி
வெட்கிப்போனும்முத்துவீராயி. (உஅ)

ஓடையிலேவிளையாடையிலே ஒரு
ஒட்டைக்கரண்டகங்கண்டெடுத்தேன்
நாடுங்கரண்டியையேவேறுருநாயகி
நம்மதென்றுள் முத்துவீராயி. (உகூ)

சிவங்கிக்கோட்டைக்குப்போவாராம் துரை
செண்டுபூக்கொண்டுவருவாராம்

கவர்ந்துகொள்ளநாமிருவோருமாய்
காத்துக்கொள்வாய்முத்துவீராயி (௩௦)

கன்றைக்கோட்டைக்குப்போவாராம் துரை
கம்பிவேட்டிவாங்கிவருவாராம்
இடையிலேகட்டிமயக்குவாராம்துரை
ஏமாந்துபோகாதேவீராயி. (௩௧)

உச்சிதக்கோட்டைக்கோர்கொம்பானேனந்த
கொம்புக்கிரண்டுகிளியானேன்
பச்சைக்கிளிவந்துஇச்சகம்பாடுது
பாரடியேமுத்துவீராயி. (௩௨)

கருங்கருங்கருங்கத்தரிக்கா யது
காம்புமுற்றினவெள்ளரிக்காய்
திருச்சினப்பள்ளிநரைச்சகிழவன்
திருவிக்கொட்டுறான்வீராயி (௩௩)

ஓடாதேஓடாதேசில்விக்காதா வுந்தன்
ஓட்டம்பிடிப்பேண்டா இல்விக்காதா
காட்டகந்தன்னிலேபோனாலு மென்னே
கண்டுபிடிப்பாயோஇல்விக்காதா. (௩௪)

ஆனந்தமுத்துவீராயிபாட்டு,

முற்றிற்று.

---